DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 88 /2018 | | Crime No.: | Station : |
| PW : 1 | L.W. 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | திருலோகசந்தர் | Caste | |
| Father's Name | நாராயணசாமி | Calling | TNSTC கன்டக்டர் |
| Village | பொள்ளாச்சி | Religion | |
| Taluk | | Age | 29 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 21.03.2024 |

**(1, 2 எதிரிகள் ஆஜர்) (3-ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது பொள்ளாச்சியில் வசித்துக்கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் தாராபுரம் கிளையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் சத்தியமங்கலம் கிளையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழுக நடத்துனராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 08.06.2017-ம் தேதி நான் சத்தி - பவானிசகார் எண் 2, டவுன் பஸ் TN 33 N 2343 என்ற அரசுப் பேருந்தில் நான் நடத்துனராகவும், ஓட்டுநராக கணேசன் என்பவரும் பணிபுரிந்தோம். அன்று மாலை 04.45 மணிக்கு நாங்கள் பவானிசாகர் பேருந்து நிலையத்திற்கு வந்தோம். 05.00 மணிக்கு பவானிசாகரிலிருந்து பேருந்தை எடுத்து சத்திக்கு வருவதற்காக பவானிசாகர் பேருந்து நிலையத்தில 04.45 மணிக்கு நிறுத்திவைத்திருந்தோம். மேற்படி பேருந்தில் பள்ளியில் படிக்கும் பெண்கள்

இருந்தார்கள். பஸ்ஸிற்கு வெளியில் கீழே 4 பசங்கள் பஸ்ஸிற்குள் இருந்த பெண்களை கிண்டல் செய்துகொண்டு நின்றுகொண்டிருந்தார்கள்.

2. நான் அவர்களிடம் ஏன் பஸ்ஸிற்குள் இருந்து பெண்களை கிண்டல் செய்கிறீர்கள் எங்களுக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படும் என்று அவர்களிடம் கூறியபோது ரஞ்சித்குமார் மற்றும் கீர்த்திகன் ஆகியோர் உன் வேலையைப் பார்த்துவிட்டு போடா புன்டாமாவனே என்று திட்டினார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜரிலுள்ள 2 நபர்கள்தான் அவர்கள். நான் சொன்னதால் என்னிடம் சண்டைக்கு வருகிறார்கள் என்று நான் பஸ் ஸ்டாண்ட் Incharge பசீர் என்பவரிடம் கூறினேன். பசீர் வந்து மேற்படி நபர்களிடம் கேட்டபோது ஆஜர் எதிரிகள் ரஞ்சித்குமார் மற்றும் கீர்த்திகன் "நீ யாருடா இதைக் கேட்கறதுக்கு இது எங்க ஏரியா நாங்கள் அப்படித்தான் பன்னுவோம்" என்று வாக்குவாதம் செய்தார்கள். மற்ற இரண்டு நபர்கள் உடனிருந்தார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லாத மற்ற நபர்களைப் பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும்.

3. என்னையும், பசீரையும் ரஞ்சித்தும், கீர்த்திகனும் அடிக்க வரும்போது அவர்களுடன் இருந்த மற்ற நபர்கள் ரஞ்சித்தையும், கீர்த்திகனையும் இழுத்துச் சென்றுவிட்டார்கள். 5 மணிக்கு பேருந்தை எடுத்துக்கொண்டு சத்தி வருவதற்காக வந்துகொண்டிருந்தபோது முதல் நிறுத்தமான டவுன்சிப் நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்தி பயணிகளை இறக்கிவிட்டுக்கொண்டிருந்தபோது எதிரி ரஞ்சித் கீழே இறங்கி வாடா தாயோலி மகனே என்று கூறினார். அப்போது எதிர்த்து மீண்டும் ஏன் பிரச்சனை செய்ய வருகிறீர்கள் என்று நான் கேட்டதற்கு கீர்த்திகன் என் சட்டையைப் பிடித்து கீழே இழுத்து கையால் எனது இடது கன்னத்தில் அறைந்தார். கூட இருந்த ரஞ்சித், மோகன்ராஜ், சிறிய வயதுள்ள மகேஷ்

ஆகியோர்கள் என்னை அடிக்க வந்தார்கள். அதற்குள் ஓட்டுநர் மற்றும் பஸ்ஸில் இருந்த பயணிகள் இறங்கி வந்து எதற்காக இவ்வாறு பிரச்சனை செய்து அனைவருக்கும் தொந்தரவு கொடுக்கிறீர்கள் என்று 4 நபர்களையும் பார்த்துக் கேட்டபோது என் மீது வைத்துள்ள கையை எடுத்துவிட்டு இந்த முறை தப்பித்துவிட்டாய் அடுத்த முறை என் கையில் சிக்கினால் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள்.

4. பின்னர் எனது பாதுகாப்பிற்காக நான் பவானிசாகர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் எழுத்துமூலமான புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரி மோகன்ராஜ் என்பவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லாததால் மேற்படி சாட்சி மோகன்ராஜ் என்பவரைப் பார்த்தால் அடையாளம் தெரியும் என்று சாட்சியமளித்துள்ளதால் எதிரி மோகன்ராஜை நீதின்றத்தில் ஆஜராக உத்தரவிட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**